# வேலைகளும் திறன்களும்

## வேலையில் நீடிக்கவும் வேலைத்தகுதியுடன் இருக்கவும் ஊக்கத்திட்டங்கள்



### SKILLSfuture ஸ்கில்ஸ்ஃபியூச்சரின் அடுத்த கட்டம்

- 25 மற்றும் அதற்கு மேலான வயதுடைய சிங்கப்பூரர்களுக்கு **$500** ஸ்கில்ஸ்ஃபியூச்சர் பயிற்சி உதவி நிதி நிரப்புத்தொகை
- 40 முதல் 60 வயதுடைய சிங்கப்பூரர்களுக்கு **$500** சிறப்பு ஸ்கில்ஸ்ஃபியூச்சர் பயிற்சி உதவி நிதி நிரப்புத்தொகை



### எஸ்ஜி ஒற்றுமை வேலைகள்

- 2020 கடைசிக்குள் **40,000 வேலைகளை** உருவாக்குவது இலக்கு
  - பொதுத் துறை **15,000 வேலைகளை** வழங்கும்
  - தனியார் துறை **25,000 வேலைகளை** வழங்கும்



### எஸ்ஜி ஒற்றுமை வேலைப் பயிற்சித் திட்டங்கள்

- **முதல்முறையாக வேலை தேடும் உள்ளூர் மக்களுக்கு**, அதிக வரவேற்புள்ள துறைகளில் (எ.கா. தகவல் தொழில்நுட்பம், பொறியியல், மென்பொருள் கல்வி, செயற்கை நுண்ணறிவு) **21,000** வேலைப் பயிற்சித் திட்டங்கள்
- **வேலை தேடும் உள்ளூர் பணியிடைக்கால ஊழியர்கள்** புதிய திறன்களைக் கற்றுக்கொண்டு புதிய வாழ்க்கைத்தொழிலைத் தொடங்குவதற்கு **4,000** வேலைப் பயிற்சித் திட்டங்கள்



### எஸ்ஜி ஒற்றுமை திறன்கள்

- வேலை தேடிக்கொண்டிருக்கும் போதே திறன்களை மேம்படுத்திக் கொள்ள, **வேலை தேடும் சுமார் 30,000 பேருக்குப்** பயிற்சி வகுப்புகள்
- பயிற்சி காலகட்டத்தின்போது **மாதத்திற்கு $1,200 பயிற்சி படித்தொகை**
- பயிற்சிக் கட்டணத்திற்கு **அதிகளவு நிதி உதவி** (ஸ்கில்ஸ்ஃபியூச்சர் பயிற்சி உதவி நிதியைப் பயன்படுத்தலாம்)



### SEP பயிற்சி ஆதரவுத் திட்டம்

- தகுதிபெறும் சுயதொழில் புரிவோர், தற்போதைய பின்னடைவின்போது **பயிற்சி பெறவும் திறனை வளர்த்துக்கொள்ளவும் 2020 கடைசி** வரை திட்டம் நீட்டிப்பு
- மேம்படுத்தப்பட்ட பயிற்சி படித்தொகையாக **ஒரு மணி நேரத்திற்கு $10**